ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 30.10.2017

## மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி – 2016

2016ஆம் ஆண்டிற்கான மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி, தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மூலம் தொகுக்கப்பட்ட பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியினை பிரிப்பதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டிருக்கிறது. மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டில், மொ.உ. உற்பத்தியிலுள்ள ஒவ்வொரு தொகுதி விடயத்தினதும் பெறுமதியானது மாகாண மட்டத்தில் தொடர்பான குறிகாட்டிகளைப் பயன்படுத்தி பிரிக்கப்பட்டுள்ளது.

2016இற்கான பெயரளவு நியதிகளில் தேசிய உள்நாட்டு உற்பத்தியானது 8.1[1] சதவீத வளர்ச்சியொன்றினையும் ரூ.558,363 (ஐ.அ.டொலர் 3,835) தலைக்குரிய வருமானத்தினையும் பதிவுசெய்து ரூ.11,839 பில்லியனாக இருந்துது. 2016இல் மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒட்டுமொத்த செயலாற்றமானது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினதும் பொருளாதாரச் செயற்பாடுகளின் அபிவிருத்திகளினதும் பொதுவான போக்கினை பின்பற்றுகின்றது. வேளாண்மை பிரதான பொருளாதாரச் செயற்பாடாகக் காணப்படுகின்ற மாகாணங்களில் வேளாண்மைச் செயற்பாடுகளின் தணிந்த செயலாற்றலானது மெதுவான வளர்ச்சிக்குப் பங்களித்தது. மொ.உ.உற்பத்தியின் 39.7 சதவீதத்தினை தன்னகத்தே கொண்டு ஒட்டுமொத்த பொருளாதார முன்னேற்றத்திற்கு மேல் மாகாணம் தொடர்ச்சியாக உந்துசக்தி அளித்தபோதிலும் பிராந்தியப் பொருளாதாரத் தளங்களின் விரிவாக்கத்துடன் ஏனைய மாகாணங்களிலிருந்தான பங்களிப்புக்களும் படிப்படியாக அதிகரிக்கின்றன.

---

[1] உண்மையான நியதிகளில், இலங்கைப் பொருளாதாரம் முன்னைய ஆண்டின் 4.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 4.4 சதவீதத்தினால் வளர்ச்சியுற்றது.

**மாகாண ரீதியாக மொ.உ.உற்பத்தியின் பங்களிப்புக்கள்**

தேசிய மொ.உ.உற்பத்தியின் பிரிப்பு மாகாணங்கள் முழுவதும் நடைமுறைச் சந்தை விலைகளில் அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளது. மேல் மாகாணம், ரூ.4,697 பில்லியன் கொண்ட அதியுயர்வான பெறுமதியினை தக்கவைத்திருந்த அதேவேளை ரூ.1,262 பில்லியன் மற்றும் ரூ.1,248 பில்லியன் கொண்ட இரண்டாம் மற்றும் மூன்றாம் பாரிய பெறுமதிகளை வடமேல் மற்றும் மத்திய மாகாணங்கள் பதிவுசெய்தன. 2016இன் தேசிய மொ.உ.உற்பத்திக்கு ரூ.1,190 பில்லியன் பங்களிப்புச் செய்து தென் மாகாணம் நான்காம் இடத்தை தக்கவைத்தது.

**அட்டவணை 1**

**மாகாண ரீதியாக மொ.உ.உற்பத்தி (நடைமுறை சந்தைவிலைகளில்)**

**2015[(1)] மற்றும் 2016[(2)]**


| மாகாணம் | 2015 [(1)] (ரூ.பில்.) | 2016 [(2)] (ரூ.பில்.) |
|---|---|---|
| மத்திய | 1,161 | 1,248 |
| கிழக்கு | 625 | 681 |
| வட மத்திய | 644 | 687 |
| வட மேல் | 1,163 | 1,262 |
| வட | 452 | 495 |
| சப்பிரகமுவா | 825 | 892 |
| தென் | 1,106 | 1,190 |
| ஊவா | 611 | 687 |
| மேல் | 4,365 | 4,697 |
| **இலங்கை** | **10,952** | **11,839** |

1. திருத்தப்பட்டது 2. தற்காலிகமானது

தேசிய உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக மாகாணப் பங்குகள் வரைபடம் 1 இல் தரப்படுத்தப்பட்டுள்ளன. மேல், வட மேல், மத்திய மற்றும் தென் மாகாணங்களிலிருந்து 10 சதவீதம் அல்லது அதற்கு கூடுதலான பிரதான பங்களிப்பு பதிவாகியிருந்தது.

**வரைபடம் 1**

**மாகாண மொ.உ.உற்பத்தியின் பங்கு - 2015 மற்றும் 2016**



அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியான போக்குடன் மேல் மாகாணத்தின் மொ.உ.உற்பத்திப் பங்கானது ஏனைய மாகாணங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு பங்களித்து 2016இல் வீழ்ச்சியடைந்தது. எனினும், உள்நாட்டு உற்பத்திக்கு 39.7 சதவீத அதிகூடிய பங்களிப்பினை வழங்கி மேல் மாகாணமானது பொருளாதாரத்தில் முன்னனியில் திகழ்ந்தது. 2015இல் காணப்பட்ட 10.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 10.7 சதவீத இரண்டாவது உயர்வான பங்களிப்பினை வட மத்திய மாகாணம் வழங்கியது. 10.5 சதவீத மூன்றாவது உயர்வான பங்களிப்பினாது மத்திய மாகாணத்திடமிருந்து அவதானிக்கப்பட்டது. 2015இல் பதிவுசெய்யப்பட்ட 10.6 சதவீதத்திலிருந்து இது சிறிய வீழ்ச்சியொன்றாகக் காணப்பட்டது. ஊவா மற்றும் வடமாணங்களின் பங்களிப்புக்கள் 2015இல் காணப்பட்ட முறையே 5.6 சதவீதம் மற்றும் 4.1 சதவீதம் உடன் ஒப்பிடுகையில் 2016இல் 5.8 சதவீதம் மற்றும் 4.2 சதவீதமாக சிறியளவு அதிகரித்தன. வட மத்திய மாகாணம் தவிர ஏனைய மூன்று மாகாணங்களிலிருந்தும் அதாவது தென், சப்பிரகமுவா, கிழக்கு மாகாணங்களிலிருந்தான மொ.உ.உற்பத்திகளுக்கான பங்களிப்பு 2016இல் முறையே 10.1 சதவீதம், 7.5 சதவீதம் மற்றும் 5.7 சதவீதமாக மாறாதிருந்தன. ஒட்டுமொத்த மொ.உ.உற்பத்திக்கான வட மத்திய மாகாணத்தின் பங்கு வேளாண்மைச் செயற்பாடுகளில் குறைவடைந்த செயலாற்றுகையின் பிரதான காரணமாக 2015இல் காணப்பட்ட 5.9 சதவீதத்திலிருந்து 2016இல் 5.8 சதவீதமாக இருந்தது.

**மாகாண ரீதியாக பெயரளவு வளர்ச்சி வீதங்கள்**

2016இல் பெயரளவு நியதிகளில் 12.4 சதவீத ஆகக்கூடிய வளர்ச்சி வீதமொன்றினைப் ஊவா மாகாணம் பதிவுசெய்ததுடன் அனைத்து மாகாணங்களும் சாதகமான வளர்ச்சி வீதங்களை (அட்டவணை 2) பதிவுசெய்தன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து முறையே 9.5 சதவீதம் மற்றும் 8.9 சதவீத இரண்டாம் மற்றும் மூன்றாம் உயர் வளர்ச்சி வீதங்கள் பதிவுசெய்யப்பட்டன. வடமேல் மற்றும் சப்பிரகமுவா மாகாணங்களும் 8.1 சதவீத தேசிய பெயரளவிலான வளர்ச்சி வீதத்தினை விஞ்சி பெயரளவிலான வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தன.

**அட்டவணை 2**

**மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியின் பெயரளவு வளர்ச்சி வீதங்கள் - 2015[1] மற்றும் 2016[2]**

| மாகாணம் | 2015 (1) (%) | 2016 (2) (%) |
|---|---|---|
| மத்திய | 6.6 | 7.5 |
| கிழக்கு | 10.0 | 8.9 |
| வட மத்திய | 14.7 | 6.7 |
| வட மேல் | 4.5 | 8.5 |
| வட | 11.1 | 9.5 |
| சப்பிரகமுவா | 12.7 | 8.2 |
| தென் | 7.0 | 7.6 |
| ஊவா | 8.6 | 12.4 |
| மேல் | 1.6 | 7.6 |
| **இலங்கை** | **5.7** | **8.1** |

1. திருத்தப்பட்டது 2. தற்காலிகமானது

**மாகாண ரீதியான பொருளாதாரக் கட்டமைப்பு**

மாகாண ரீதியான மொ.உ.உற்பத்திக்கான பொருளாதாரச் செயற்பாடுகளின் பங்களிப்புகள் அட்டவணை 3இல் தரப்பட்டுள்ளன. மாகாணங்கள் முழுவதிலும் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்படக்கூடியதாக இருந்தபோதிலும் இரண்டு வருடங்களின் ஒப்பிடுகையின் போது மாகாணத்தினுள் தொகுப்புக்கள் ஏறக்குறைய மாறாதிருந்தது.

**அட்டவணை 3**

**மாகாண ரீதியான பொருளாதாரச் செயற்பாட்டு சதவீதப் பங்கு -2015 மற்றும் 2016**[2]

| மாகாணம் | வேளாண்மை | | கைத்தொழில் | | பணிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| மத்திய | 10.8 | 10.5 | 21.4 | 21.0 | 60.6 | 60.1 |
| கிழக்கு | 13.2 | 12.2 | 24.7 | 24.9 | 54.9 | 54.5 |
| வட மத்திய | 12.7 | 10.7 | 19.0 | 19.3 | 61.0 | 61.6 |
| வட மேல் | 11.5 | 10.0 | 26.7 | 26.5 | 54.5 | 55.0 |
| வட | 12.2 | 12.6 | 22.9 | 24.6 | 57.6 | 54.4 |
| சப்பிரகமுவா | 8.7 | 7.6 | 24.2 | 25.8 | 59.8 | 58.1 |
| தென் | 14.5 | 13.5 | 16.9 | 17.2 | 61.3 | 60.9 |
| ஊவா | 14.7 | 13.1 | 25.4 | 27.4 | 52.6 | 51.1 |
| மேல் | 2.1 | 2.1 | 34.6 | 33.3 | 56.0 | 56.2 |
| **இலங்கை** | **8.2** | **7.5** | **27.3** | **27.1** | **57.3** | **57.0** |

2016இல் மேல் மாகாணத்தில் மொ.உ.உற்பத்தியின் 2.1 சதவீதத்தினை வேளாண்மைத் துறை உள்ளடக்குகின்ற அதேவேளை ஏனைய மாகாணங்களில் மாகாண உள்நாட்டு உற்பத்திக்கான அதன் பங்களிப்பு 7.6 தொடக்கம் 13.5 வீதம் வரையான வீச்சில் காணப்படுகின்றது. 2015 உடன் ஒப்பிடுகையில் 2016இல் மொ.உ.உற்பத்திக்கான வேளாண்மைச் செயற்பாடுகளின் பங்களிப்பு வட மாகாணத்தில் சிறியளவு அதிகரித்த அதேவேளை அனைத்து ஏனைய மாகாணங்களிலும் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன.

மாகாண மொ.உ.உற்பத்திக்கு கைத்தொழில் செயற்பாடுகளிலிருந்தான பங்களிப்பு மத்திய, வட மேல் மற்றும் மேல் மாகாணங்கள் தவிர ஏனைய அனைத்து மாகாணங்களிலும் அதிகரித்தன. 2016இல் கைத்தொழில் செயற்பாடுகளிலிருந்தான மாகாண மொ.உ.உற்பத்திக்கான பாரிய பங்களிப்பு மேல் மாகாணத்திலிருந்து பதிவாகிய அதேவேளை குறைந்த பங்கு தென் மாகாணத்தில் பதிவாகியது.

2016இல் மாகாண உள்நாட்டு உற்பத்தியின் 51.1 சதவீதம் மற்றும் 61.6 வீதத்திற்கு இடையிலான பங்களிப்புகளுடன் அனைத்து மாகாணங்களிலும் பணிகள் செயற்பாடுகள் பிரதான பங்கொன்றினை வழங்கின. எவ்வாறாயினும், 2015 உடன் ஒப்பிடுகையில் 2016இல் பணிகள் செயற்பாடுகளிலிருந்தன பங்களிப்பு வட மத்திய, வட மேல் மற்றும் மேல் மாகாணங்களில் அதிகரித்தன. ஆயினும் அனைத்து ஏனைய மாகாணங்களிலும் வீழ்ச்சியடைந்தன.

2 உற்பத்தி சரிப்படுத்தல் மீதான வரிகளினதும் உதவு தொகைகளினதும் சதவீதப் பங்கு உள்ளடக்கப்படாமையினால் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் சதவீதப் பங்குகளில் சேர்த்தல் 100 இற்கு சமப்படுத்தப்படாது.

**மாகாண ரீதியாக தலைக்குரிய வருமானம்**

மாகாண ரீதியான பெயரளவு தலைக்குரிய மொ.உ.உற்பத்தி அட்டவணை 4இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 4**

**மாகாண ரீதியாக தலைக்குரிய மொ.உ.உற்பத்தி[1]**

**(நடைமுறை சந்தை விலைகளில்) - 2015[2] மற்றும் 2016[3]**

| மாகாணம் | 2015 (1) (ரூ.பில்.) | விகிதம் | 2016 (2) (ரூ.பில்.) | விகிதம் |
|---|---|---|---|---|
| மத்திய | 436,819 | 0.8 | 463,863 | 0.8 |
| கிழக்கு | 386,911 | 0.7 | 413,720 | 0.7 |
| வட மத்திய | 490,653 | 0.9 | 516,388 | 0.9 |
| வட மேல் | 475,084 | 0.9 | 509,602 | 0.9 |
| வட | 413,343 | 0.8 | 447,260 | 0.8 |
| சப்பிரகமுவா | 414,948 | 0.8 | 444,156 | 0.8 |
| தென் | 432,577 | 0.8 | 460,569 | 0.8 |
| ஊவா | 464,405 | 0.9 | 515,437 | 0.9 |
| **இலங்கை** | **522,355** | **1.0** | **558,363** | **1.0** |

1. பிந்திய மக்கள் தொகை எண்ணிக்கைகளுக்கு அமைவானது.
2. திருத்தப்பட்டது
3. தற்காலிகமானது

அனைத்து மாகாணங்களிலும் தலைக்குரிய வருமானம் அதிகரித்த அதேவேளை மேல் மாகாணத்தில் மாத்திரம் இரண்டு வருடங்களிலும் தேசியப் பெறுமதியினை விஞ்சியிருந்தது. மாகாண தலைக்குரிய வருமானத்திற்கும் தேசிய தலைக்குரிய வருமானத்திற்கும் இடையிலான விகிதாசாரம் அட்டவணை 4இல் தரப்பட்டுள்ளதுடன் 2015 மற்றும் 2016 இரு வருடங்களிலும் விகிதாசாரங்கள் மாறாதிருப்பதினை அட்டவணை பிரதிபலிக்கின்றது.